




dinakani2023@gmail.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com


காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 285 | 4 Pages | 12.5.2025 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 285 | 4 பக்கங்கள் | 12.5.2025 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |

**கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத் தள்ளாது புத்தே ளுலகு**

**விளக்கம்: களவு செய்வார்க்கு உடலில் உயிர் வாழும் வாழ்வும் தவறிப் போகும், களவு செய்யாமல் வாழ்வோர்க்கு தேவருலகும் வாய்க்கத் தவறாது.**

## பாகிஸ்தான் நடத்திய தாக்குதலில் பிஎஸ்எப் சப்இன்ஸ்பெக்டர் வீர மரணம்



ஸ்ரீநகர், மே.12

இந்தியா, பாகிஸ்தான் இடையே கடந்த சில நாட்களாக மோதல் நடைபெற்று வந்தது. இந்த மோதலில் இரு தரப்பிலும் பலர் உயிரிழந்தனர்.

அதேவேளை, இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்திற்கு சம்மதம் தெரிவித்ததாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் நேற்று அறிவித்தார். மேலும், இரு நாடுகளும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டன. ஆனால், ஒப்பந்தத்தை மீறி பாகிஸ்தான் நேற்று இரவு காஷ்மீர் மீது டிரோன் தாக்குதல்நடத்தியது.இதனால்,இருநாடுகளுக்கும் இடையே போர் பதற்றம் நீடித்து வருகிறது.

இந்நிலையில், ஜம்முகாஷ்மீரின் ஆர்எஸ் புரா பகுதியில் உள்ள சர்வதேச எல்லைப்பகுதியில் நேற்று இரவு பாகிஸ்தான் ப்டையினர் துப்பாக்கி சூடு நடத்தினர். இந்த துப்பாக்கி சூட்டில் பிஎஸ்எப் (எல்லைப்பாதுகாப்புப்படை) சப் இன்ஸ்பெக்டர் முகமது இம்தியாஸ் வீர மரணமடைந்தார்.

## பாகிஸ்தான் அத்துமீறலுக்கு இந்தியா பதிலடி; வெளியுறவுத்துறை செயலாளர் தகவல்



ஸ்ரீநகர், மே.24

இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வருகிறது. இரு நாடுகளும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தியாவின் ஜம்முகாஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களை குறிவைத்து பாகிஸ்தான் டிரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுத்தது. அதேவேளை, இந்தியாவும், பாகிஸ்தானும் உடனடியாக போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் இன்று மாலை 5 மணியளவில் அறிவித்தார். இதையடுத்து, பாகிஸ்தானுடனான போர் இன்று மாலை 5 மணி முதல் நிறுத்தப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது. ஆனாலும், போர் நிறுத்தத்தை மீறி எல்லையில் பாகிஸ்தான் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில், மத்திய வெளியுறவுத்துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி இன்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறுகையில், இந்தியா, பாகிஸ்தான் இடையேயான கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் ராணுவ செயல்பாடுகளை நிறுத்த இருநாடுகளின் ராணுவ டைரக்டர் ஜெனரல் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அந்த ஒப்பந்தம் கடந்த சில மணிநேரங்களில் பாகிஸ்தானால் மீறப்பட்டது. எல்லையில் பாகிஸ்தான் மேற்கொள்ளும் அத்துமீறல்களுக்கு இந்திய ராணுவம் பதிலடி கொடுத்து வருகிறது. எல்லையில் அத்துமீறல்களுக்கு பாகிஸ்தாந்தான் பொறுப்பு' என்றார்.

## போர் நிறுத்தம் அமலாகவில்லை; உமர் அப்துல்லா



ஸ்ரீநகர், மே.12

இந்தியா, பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் நிலவி வருகிறது. இரு நாடுகளும் பரஸ்பரம் தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்தியாவின் ஜம்முகாஷ்மீர், பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களை குறிவைத்து பாகிஸ்தான் டிரோன், ஏவுகணை தாக்குதல் நடத்தின. இந்த தாக்குதலுக்கு இந்தியா பதிலடி கொடுத்தது. இரு நாடுகளுக்கும் இடையேயான மோதல் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வந்தது. அதேவேளை, இந்தியாவும், பாகிஸ்தானும் உடனடியாக போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் இன்று மாலை 5 மணியளவில் அறிவித்தார். இதையடுத்து, பாகிஸ்தானுடனான போர் இன்று மாலை 5 மணி முதல் நிறுத்தப்படுவதாக மத்திய அரசு அறிவித்தது. இந்நிலையில், போர் நிறுத்தத்தை மீறி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருகிறது. ஜம்முகாஷ்மீர், பஞ்சாப் பகுதிகளில் டிரோன், ஏவுகணைகள் மூலம் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருகிறது. போர் நிறுத்தம் அமலாகவில்லை என்று ஜம்முகாஷ்மீர் முதல்மந்திரி உமர் அப்துல்லா தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ளஎக்ஸ்பதிவில்,போர்நிறுத்தம்அமலாகவில்லை.பாகிஸ்தான் தாக்குதலை தொடர்ந்து ஸ்ரீநகரில் உள்ள வான் பாதுகாப்பு அமைப்பு செயல்பட்டு வருகிறது' என தெரிவித்துள்ளார்.

## போர் நிறுத்தம்: அனைத்துக் கட்சி கூட்டத்தை கூட்ட காங்கிரஸ் வலியுறுத்தல்

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூரதாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது. இந்திய ராணுவத்தின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை தொடர்ந்து இந்தியாபாகிஸ்தான் இடையே போர்பதற்றம் அதிகரித்த நிலையில், எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்தது. இந்த தாக்குதல் முயற்சிகளை இந்திய ராணுவம் தொடர்ந்து முறியடித்து வந்தது. இந்த நிலையில், தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார். இதை இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் உறுதி செய்துள்ளன. இந்த நிலையில் அனைத்துக் கட்சி கூட்டத்தை உடனடியாக கூட்ட வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது: இந்தியா மற்றும் பாகிஸ்தான் இடையேயான போர் நிறுத்தத்தை அமெரிக்கா அறிவித்து இருப்பது வரலாற்றில் இதுவரை இல்லாத ஒன்று. பிரதமர் மோடி அனைத்துக் கட்சி கூட்டத்தை உடனடியாக கூட்டி நாட்டின் பாதுகாப்பு குறித்த விவகாரத்தில் அனைத்து கட்சிகளின் கருத்துகளையும் கேட்க வேண்டும். கடந்த பதினெட்டு நாட்களில் நடந்த பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல், அதன்பிறகு நடந்த நிகழ்வுகள் குறித்து விவாதிக்க, கூட்டுத் தீர்மானத்தை நிரூபிக்க சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தொடரை கூட்ட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தட்டித் தூக்கும் தமிழ்நாடு அரசு.. இத்தனை துறைகளில் முதலிடமா? டேட்டாவை பாருங்க மெகா லிஸ்ட்

சென்னை

மிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையின் கீழ் திராவிட மாடல் அரசின் திட்டங்களால் 897 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில், ஏற்றுமதியில் தமிழ்நாடு இருமடங்கு சாதனை, மின்னணு ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம், வேலைவாய்ப்புகள் வழங்குவதில் சாதனை படைத்துள்ளதாக தமிழக அரசு பெருமிதம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,"தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 2021 ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாள் முதலமைச்சராக பொறுப்பேற்றார்கள். அப்பொழுது கொரோனா தொற்று தமிழ்நாட்டை ஆட்டிப்படைத்தது.

உயிர்ப்பலிகள் வாங்கியது. கொரோனா தொற்று ஏற்படும் போது அச்சத்தில் ஒருவருடன் ஒருவர் சந்திப்பதைக்கூடத் தவிர்க்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. முதலமைச்சர் அவர்கள் அச்சம் சிறிதுமின்றி, கொரோனா ஒழிப்பில் ஈடுபட்டு மக்களைப் பாதுகாத்த மகத்தான பணிகளை பத்திரிகைகள் பாராட்டின. இந்தியாவிலேயே சிறந்த முதலமைச்சராகப் போற்றப்பட்டார். நான் பாராட்டப்படுவதைவிட இந்தியாவில் தமிழ்நாடு தான் முதல் மாநிலமாக முன்னேற்றம் அடைவதையே விரும்புகிறேன். அதுதான் எனக்கு மகிழ்ச்சி தரும் என்று கூறி அந்த இலக்கினை அடைந்திட அயராது பாடுபட்டார்கள்.



யில் மாணவர் சேர்க்கை விகிதம் தேசிய அளவில் 26 சதவிகிதமாக இருப்பது 20232024ல் 51.3 சதவிகிதமாக உயர்ந்து தமிழ்நாட்டின் மகத்தான சாதனையை வெளிப்படுத்துகிறது.

முதலமைச்சர் அவர்களின் சீரிய நிர்வாகத் திறன்களால் மாநிலம் எங்கும் பெரிய அளவில் சாதி மோதல்களோ, தொழிற்சாலைகளில் பிரச்சினைகளோ இல்லாமல் கடந்த நான்கு ஆண்டு காலமும் தமிழ்நாட்டில் அமைதி நிலவுவது மாநிலத்தில் நிலையான வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது.

2022 ஆகஸ்ட் முதல் இதுவரை காவல் நிலைய மரணங்கள் எதுவும் நிகழவில்லை என்பது பாராட்டுக்குரியது. மேலும், பெண்களுக்கு எதிரான குற்ற விகிதம் 1,00,000 மக்கள் தொகையில் இந்தியாவில் 66.4; ஆனால் தமிழ்நாட்டில் 24 என வெகுவாகக் குறைந்து மகளிர் நலன் பாதுகாக்கப்படுகிறது.

2023 2024 ஆம் ஆண்டுக்கான அவ்தார் நிறுவன ஆய்வில் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு மிகவும் உகந்த பாதுகாப்பான நகரம் சென்னை எனப் பாராட்டப்பட்டுள்ளது.

பொருளாதார வளர்ச்சியில் 9.69% பெற்று இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம்.

ஏற்றுமதி தயார் நிலையில் தமிழ்நாடு முதலிடம்.

தோல் பொருள்கள் ஏற்றுமதி மற்றும் ஜவுளித் துணிகள் ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்.

புத்தாக்கத் தொழில்கள் தரவரிசைப் பட்டியலில் 2018இல் கடைசி இடத்திலிருந்த தமிழ்நாடு, 2022 திராவிட மாடல் ஆட்சியில் முதலிடம்..

பெண் காவல் அதிகாரிகளைக் கொண்டுள்ளதில் (Women IPS) தமிழ்நாடு முதலிடம்.

இந்திய அளவில் காலணிகள் மற்றும் தோல் பொருள்கள் தயாரிப்பில் தமிழ்நாடு 38 சதவிகிதம் பெற்று முதலிடம்.

அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்கள் எண்ணிக்கையில் தமிழ்நாடு முதலிடம்.

வறுமை ஒழிப்பில் தமிழ்நாடு முதலிடம்.

இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் செயல்படும் தொழிற்சாலைகளில் தமிழ்நாடு முதலிடம்.

இந்தியாவிலேயே அதிக தொழிலாளர்களை கொண்டுள்ளதில் தமிழ்நாடு முதலிடம்.

தொழிற்சாலைகளில் பணிபுரியும் அதிக பெண் தொழிலாளர்களை கொண்டுள்ளதில் தமிழ்நாடு முதலிடம்.

அதிகத் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளதில் தமிழ்நாடு முன்னணி மாநிலம்.

அதிகத் தொழிற்சாலைகளைக் கொண்டுள்ளதில் தமிழ்நாடு முன்னணி மாநிலம்.

உலகளாவிய திறன் மையங்களில் மும்பை, புனே, ஐதராபாத், பெங்களூரு முதலான நகரங்களைவிட சென்னை 24.5 சதவிகித வளர்ச்சியுடன் 94,121 திறன் மையங்கள் கொண்டு இந்தியாவில் தமிழ்நாடு முதலிடம்." என கூறப்பட்டுள்ளது.

## தேனி மாவட்டம் கம்பம் அருகே சிலிண்டர் வெடித்து விபத்து

தேனி மாவட்டம் கம்பம் அருகே மணிநகர் பகுதியில் முருகன் என்பவர் பழைய இரும்பு கடை நடத்தி வருகிறார்

இங்கு வாகனங்களை வாங்குவது வெல்டிங் உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்களை விற்பனை செய்வதும் தொழிலாக வைத்துள்ளார்

இந்த கடையில் திடீரென்று எதிர்பாராத விதமாக அருகில் இருந்த 2 வெல்டிங் சிலிண்டர் அதிக சத்தத்துடன் வெடித்தது

அக்கம் பக்கத்தில் வருவதற்குள் இரும்பு கடை முழுவதும் தீ சூழ்ந்து கொண்டது இதனால் அப்பகுதியில் புகை மண்டலமாக காட்சியளித்தது

அருகில் இருந்தவர்கள் தீயணைப்பு துறைக்கு தகவல் கொடுத்தனர்தகவல்அறிந்துவந்ததீயணைப்பு துறையினர் தீயே கட்டுக்குள் கொண்டு வந்தனர்

மேலும்பொதுமக்கள்கூறுகையில் குழந்தைகள், வயதானவர்கள், அருகில் குடியிருந்து வரும் நிலையில்

பாதுகாப்பு உபகரணங்கள் இல்லாமல் இயங்குவதால் பொதுமக்கள் வாழ்வாதாரம் கேள்விக்குறியாகி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது

## அதிர்ச்சி ! போலி மதுபான ஆலை கண்டுபிடிப்பு; சிக்கியது 10 ஆயிரம் மதுபாட்டில்

விழுப்புரம்:புதுச்சேரியில்இருந்து தமிழகப்பகுதிக்கு வேனில் கடத்திச் செல்லப்பட்ட 10 ஆயிரம் போலி மதுபாட்டில்களை, தமிழக மத்திய நுண்ணறிவு பிரிவு போலீசார் பறிமுதல் செய்து, 5 பேரை கைது செய்தனர்.

அமைச்சரின் மகளுக்கு சொந்தமான இடத்தில் செயல்பட்டு வந்த போலி மதுபான தொழிற்சாலையும் கண்டுபிடிக்கப்பட்டது.

அமைச்சரின் மகளுக்கு சொந்தமான இடத்தில் போலி மதுபான தொழிற்சாலை புதுச்சேரி மாநிலம், வில்லியனுாரில் இருந்து வானுார் பூத்துறை வழியாக வேனில் மது பாட்டில்கள் கடத்தப்படுவதாக விழுப்புரம் மத்திய நுண்ணறிவு பிரிவு போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. பூத்துறை சாலையில் நேற்று தமிழக போலீசார் வாகன தணிக்கையில் ஈடுபட்டிருந்தனர். வில்லியனுாரில் இருந்து திருச்சிற்றம்பலம்கூட்ரோடு நோக்கி வந்தஈச்சர்வேனைமடக்கிசோதனை நடத்தினர்.

வேனில் தமிழக டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்யும் மதுபானம் பெயரில், போலி மதுபானம் தயாரித்து அதில் ஸ்டிக்கர் ஒட்டி, ஏராளமான பெட்டியில் கொண்டு செல்வது கண்டுபிடிக்கப்பட்டது. வேன் டிரைவரை பிடித்து விசாரித்தபோது, திருச்சி கருமண்டபம் சமத்துவ நகரை சேர்ந்த சின்னசாமி மகன் கருத்தபாண்டி, (வயது 40) என்பது தெரியவந்தது.

கடத்தல் மதுபானம் கொண்டு செல்லும் வழியை காட்ட வேனுக்கு முன்னால் காரில் சென்ற, சேலம் மாவட்டம் ஆத்துார் அடுத்த ராமநாதபுரத்தை சேர்ந்த சிதம்பரம் மகன் சித்திக், 22; மரக்காணம் அனுமந்தை செட்டிக்குப்பம் ராஜசேகர், புதுச்சேரி கோரிமேடு வீமன் நகர் சேர்ந்த பால் ஜோஸ், புதுச்சேரி, கொம்பாக்கம் கண்ணாயிரம் மகன் பிரபு, ஆகியோரை பிடித்தனர்.

விசாரணையில், அனுமந்தை சக்திவேல், அவரது உறவினரின் மூலம், வில்லியனுார் உளவாய்க்காலில் போலி மதுபான தொழிற் சாலை அமைத்து, போலி டாஸ்மாக் மதுபானம் தயாரித்து, சென்னை வண்டலுார் பகுதிக்கு கடத்தி சென்றது தெரிய வந்தது. போலீசார் கருத்தபாண்டி, சித்திக், பால்ஜோஸ், ராஜசேகர் ,பிரபு ஆகிய 5 பேரை கைது செய்தனர்.




வேனில் இருந்த ரூ. 20 லட்சம் மதிப்புள்ள, 'எக்ஸ்பிரஸ் ஸ்பெஷல்' என்ற பெயரில் அச்சிடப்பட்ட 10,032 போலி குவாட்டர் பிராந்தி பாட்டில்கள், கடத்தலுக்கு பயன்படுத்திய ஈச்சர் வேன், ரூட் பார்ப்பதற்கு பயன்படுத்தப்பட்ட டாடா இண்டிகோ கார் பறிமுதல் செய்து, ஆரோவில் போலீசில் ஒப்படைத்தனர்.

கோட்டக்குப்பம் டி.எஸ்.பி., உமாதேவி பறிமுதல் செய்யப்பட்ட போலி மதுபாட்டில்களை பார்வையிட்டு, போலீசாரை பாராட்டினார். ஆரோவில் போலீசார் வழக்கு பதிவு செய்து, தலைமறைவாக உள்ள சக்திவேல் உள்ளிட்ட சிலரை தேடி வருகின்றனர். கைது செய்யப்பட்ட ராஜசேகர் அளித்த தகவலின் பேரில், ஆரோவில் காவல் ஆய்வாளர் கமலஹாசன் தலைமையில் போலீசார், வில்லியனுார் அடுத்த உளவாய்க்கால் பகுதியில் கடந்த ஒரு வாரங்களாக செயல்பட்டு வந்த போலி மதுபானதொழிற்சாலையில்சோதனை நடத்தினர்.

தமிழக டாஸ்மாக் மதுபானம் பெயரில் அச்சிடப்பட்டிருந்த லேபிள்கள், காலி பாட்டில்கள், மூடி, காலி அட்டை பெட்டிகள், மதுபானம் தயாரிக்கும் இயந்திரம் இருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தனர். இந்த இடம் புதுச்சேரி அமைச்சர் தேனீ ஜெயக்குமார் மகளுக்கு சொந்தமான இடம் என்பது தெரியவந்தது. அனுமந்தை சக்திவேலின் உறவினர் மூலம் பிளாஸ்டிக் அறைப்பதற்கு இடத்தை வாடகைக்கு எடுத்து, போலி மதுபான ஆலை நடத்தி வந்தது தெரியவந்தது.

போலி மதுபானம் தயாரிக்க பயன்படுத்திய இயந்திரம், காலிபாட்டில்கள் உள்ளிட்ட பொருட்களை போலீசார் பறிமுதல் செய்தனர். இதே இடத்தில் கடந்த சில மாதத்திற்கு முன்பு, சந்தன எண்ணெய் தயாரிப்பதற்காக குவித்து வைக்கப்பட்டிருந்தடன் கணக்கிலான சந்தன மரக் கட்டை துகள்களை தமிழக வனத்துறையினர் பறிமுதல் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.






## சென்னையில் ஜூன் முதல் மாம்பழ சுற்றுலா விழா: பல்வேறு நாடுகளின் மாம்பழங்களை ருசிக்க அழைப்பு




சென்னை: வெளிநாடுகளில் நடைபெறும் ஒயின் மற்றும் ஸ்ட்ராபெரி பேஸ்டிவலைப் போல, இந்தியாவிலும் மாம்பழத்தை மையமாகக் கொண்டு விழா நடைபெற உள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்த நிகழ்வு, வருகிற ஜூன் மாதம் 1, 8, 15 மற்றும் 22 தேதிகளில் கூடுவாஞ்சேரியில் உள்ள ஹென்னா ரெட்டி மாம்பழ தோப்பில் நடைபெறவுள்ளது.

போயஸ் கார்டனில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், விழாவின் முக்கிய அம்சங்கள் வெளியிடப்பட்டன. இதில் கூறியதாவது: “இந்த மாம்பழ சுற்றுலா ஒரு விசேஷ அனுபவமாக அமையும். சுற்றுலா பயணிகள் மாம்பழ தோப்புகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு இந்தியா மற்றும் பல்வேறு வெளிநாடுகளைச் சேர்ந்த வகை வகையான மாம்பழங்களை நேரில் காணும் வாய்ப்பு ஏற்படுகின்றது. மேலும் அவற்றை ருசித்து மகிழவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.”

விழாவில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் பங்கேற்கலாம். குடும்பத்தோடு நேரம் செலவிட ஏராளமான விளையாட்டு மற்றும் அனுபவ செயல்பாடுகளும் உள்ளன. மாம்பழத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பலவகை உணவுகளும் வழங்கப்படும். இப்போதே முன்பதிவு செய்யுங்கள்! 98840 20848

# மதுரை, திருவண்ணாமலைக்கு சிறப்பு ரெயில்கள்: தெற்கு ரெயில்வே அறிவிப்பு



சென்னை, மே.12

தெற்கு ரெயில்வே சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது,

அழகர் திருவிழாவை முன்னிட்டு தாம்பரத்தில் இருந்து இன்று (சனிக்கிழமை) இரவு 11.30 மணிக்கு புறப்படும் அதிவிரைவு சிறப்பு ரெயில் (எண்: 06049) மறுநாள் காலை 7.55 மணிக்கு மதுரை சென்றடையும். மறுமார்க்கமாக இந்த ரெயில் (எண்: 06050) மதுரையில் இருந்து மே 12ந் தேதி இரவு 11.30 மணிக்கு புறப்பட்டு மறுநாள் காலை 7.50 மணிக்கு தாம்பரம் வந்தடையும். இந்த ரெயில் தாம்பரத்தில் இருந்து செங்கல்பட்டு, மேல்மருவத்தூர், திண்டிவனம், விழுப்புரம், விருத்தாசலம், அரியலூர், ஸ்ரீரங்கம், திருச்சி, மணப்பாறை, திண்டுக்கல், கொடைக்கானல் சாலை வழியாக மதுரை சென்றடையும்.

சித்திரை மாத பவுர்ணமி கிரிவலத்தை முன்னிட்டு தாம்பரத்தில் இருந்து மே 11ந் தேதி காலை 11 மணிக்கு புறப்படும் முன்பதிவில்லா சிறப்பு மெமு விரைவு ரெயில் (எண்: 06137) அன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருவண்ணாமலை சென்றடையும். மறுமார்க்கமாக இந்த ரெயில் (எண்: 06138) அதேநாளில் திருவண்ணாமலையில் இருந்து மாலை 5 மணிக்கு புறப்பட்டு இரவு 8.45 மணிக்கு தாம்பரம் வந்தடையும்.

இந்த ரெயில் தாம்பரத்தில் இருந்து செங்கல்பட்டு, மேல்மருவத்தூர், திண்டிவனம், விழுப்புரம், திருக்கோவிலூர் வழியாக திருவண்ணாமலை சென்றடையும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வீட்டில் தூங்கி கொண்டிருந்த பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த இளைஞர்



கன்னியாகுமரி, மே.12

கன்னியாகுமரி மாவட்டம் ஈத்தாமொழியை அடுத்த தேரிமேல்விளையை சேர்ந்தவர் தனுஷ் (வயது22), தேங்காய் உரிக்கும் தொழிலாளி. இவர் சம்பவத்தன்று இரவு 10.40 மணியளவில் 32 வயதுடைய ஒரு பெண்ணின் வீடு இருக்கும் பகுதி வழியாக சென்றார். அந்த பெண்ணின் கணவர் கோவில்திருவிழாவுக்காக சென்றிருந்தார். இதனால் அவர் கணவரின் வருகையை எதிர்பார்த்து கதவை பூட்டாமல் படுக்கை அறையில் குழந்தைகளுடன்தூங்கிகொண்டிருந்தார்.

இதை கவனித்த தனுஷ் வீட்டுக்குள் புகுந்து படுக்கை அறைக்குள் சென்றார். இதனால் கண் விழித்த பெண் அதிர்ச்சி அடைந்து சத்தம் போட முயன்றார். ஆனால், தனுஷ் அந்த பெண்ணின் வாயை பொத்தி பாலியல் வன்கொடுமை செய்தார். தனுசின் பிடியில் இருந்து தப்பிக்க பெண் சத்தம் போட்டார்.

ஆனால், அந்த பகுதியில் கோவில் திருவிழா ஒலிப்பெருக்கி வைத்திருந்ததால் பெண்ணின் சத்தம் வெளியே கேட்கவில்லை.

இந்த சம்பவத்தை வெளியே கூறினால் கொலை செய்து விடுவேன் என அப்பெண்ணை மிரட்டி விட்டு தனுஷ் அங்கிருந்து தப்பிச் சென்றார். இந்த சம்பவம் குறித்து பாதிக்கப்பட்ட பெண் ஈத்தாமொழி போலீசில் புகார் கொடுத்தார். அந்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து தனுஷை கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இரவு நேரம் தூங்கிக்கொண்டிருந்த இளம் பெண்ணின் வாயைப் பொத்தி மிரட்டி இளைஞர் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் அந்த பகுதியில் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது.

# தூத்துக்குடி விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு: அதிகாரிகளுடன் எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் ஆலோசனை




தூத்துக்குடி, மே.12

காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம்தேதி பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் பலியானார்கள். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக இந்தியா ஆபரேஷன் சிந்தூர் என்ற தாக்குதலை நடத்தியது. இதையடுத்து பாகிஸ்தான் ராணுவம் அத்துமீறி, இந்திய குடியிருப்பு பகுதிகளில் தாக்குதலை நடத்தியது. இந்தியாவின் 15 நகரங்களை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் காஷ்மீரில் பொது மக்கள் 16 பேர் பலியானார்கள். பாகிஸ்தானின் இந்த அத்துமீறலுக்கு இந்தியா பதிலடி கொடுத்து வருகிறது.

இதனால் தற்போது இந்தியாபாகிஸ்தான் எல்லையில் போர்பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால் இந்திய வான்மண்டலங்களில் கட்டுப்பாடுகளை விதித்து விமான சேவைகளை ஒழுங்குப்படுத்தி மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. இந்திய அரசிடம் இருந்து மறுஉத்தரவு வரும் வரையில் பயணிகளின் பாதுகாப்பு நலன் கருதி, இந்த நிலை நீடிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே போர்பதற்றம் காரணமாக வடக்கு மற்றும் மேற்கு இந்தியாவில் உள்ள 32 விமான நிலையங்கள் வருகிற 15ம் தேதி காலை 5.29 மணி வரை மூடப்படும் என்று மத்திய சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் அறிவித்துள்ளது.

இந்ந நிலையில் தூத்துக்குடி மாவட்ட எஸ்.பி. ஆல்பர்ட் ஜான் நேற்று தூத்துக்குடி விமான நிலையத்தின் பாதுகாப்பு நெறிமுறைகளை நேரில் சென்று ஆய்வு செய்தார். நாட்டில் தற்போது நிலவும் பாதுகாப்பு சூழ்நிலை மற்றும் அதிகரித்த எச்சரிக்கை நிலையை கருத்தில் கொண்டு, பல பாதுகாப்பு முன்னேற்பாடுகள் தூத்துக்குடி விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டது. அதில் பல அடுக்கு பயணிகள் மற்றும் ஊழியர்களிடம் சோதனை, உடமைகள் சோதனை, வாகன சோதனை மற்றும் பிற நாசவேலை தடுப்பு ஒத்திகைகளின் செயல்பாட்டை மாவட்ட எஸ்.பி. தனிப்பட்ட முறையில் ஆய்வு செய்தார்.

மேலும் தூத்துக்குடி விமான நிலையத்தில் மாவட்ட எஸ்.பி. தலைமையில் அதிகாரிகளுடன் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அனைத்து பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் ஆலோசனை செய்யப்பட்டது. அதில் கூடுதல் ஆயுதமேந்திய விரைவு அதிரடி படைகள் மற்றும் அதிகப்படுத்தப்பட்ட பணியாளர்களின் செயல்பாடு குறித்து விரிவாக ஆராயப்பட்டது. விமான நிலைய எல்லைகள் மற்றும் வெளிப்புற பகுதிகளில் கூடுதல் ஆயுத மேந்திய ரோந்து காவலர்கள் நியமிக்கப்பட்டனர். அண்மையில் நடத்தப்பட்ட விமானக் கடத்தல் தடுப்பு ஒத்திகையின் கூறுகள் புதுப்பிக்கப்பட்டன. மேலும் தூத்துக்குடி விமான நிலையத்தின் பாதுகாப்பில் தீவிர கண்காணிப்பை தொடர்ந்து பராமரிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எஸ்.பி. அறிவுறுத்தினார்.

# ஈரோடு: 10 ஆண்டுகளாக குழந்தை இல்லாத ஏக்கத்தில் தம்பதி தற்கொலை



ஈரோடு, மே.12

ஈரோடு சூரம்பட்டி ராஜாஜி வீதியைச் சேர்ந்தவர் மாதேஸ்வரன் (40 வயது). டைல்ஸ் ஒட்டும் தொழிலாளி. இவருக்கும், பெருந்துறையைச் சேர்ந்த கீதா (32 வயது) என்பவருக்கும் கடந்த 2015ம் ஆண்டு திருமணம் நடந்தது. திருமணமாகி 10 ஆண்டுகள் ஆகியும் இந்த தம்பதிக்கு குழந்தை இல்லை. இதனால் மனமுடைந்த தம்பதியினர் உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் கூட கலந்து கொள்ளாமல் இருந்து வந்துள்ளனர்.

இந்தநிலையில்மாதேஸ்வரன் தன்னுடைய மனைவியுடன் அருகில் உள்ள தனது சகோதரர் வீட்டுக்கு சென்றுள்ளார். அங்கு தனக்கு குழந்தை இல்லாதது குறித்து சகோதரரிடம் கூறி அழுது உள்ளார். இதனால் அவர் மாதேஸ்வரனுக்கு ஆறுதல் கூறிவிட்டு வெளியே சென்றார்.

இதற்கிடையில் மனம் உடைந்த தம்பதி தற்கொலை செய்து கொள்ள முடிவு செய்து, வீட்டில் உள்ள விட்டத்தில் ஒரே சேலையில் தூக்குப்போட்டு கொண்டனர். சிறிது நேரம் கழித்து அவருடைய சகோதரர் வந்தபோது வீட்டின் கதவு உள்பக்கமாக பூட்டப்பட்டிருந்தது. இதனால் சந்தேகம் அடைந்த அவர் ஜன்னல் வழியாக எட்டிப்பார்த்தார்.

அப்போது மாதேஸ்வரன், கீதா இருவரும் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். இதுகுறித்து சூரம்பட்டி போலீசாருக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில் விரைந்து வந்த போலீசார் மாதேஸ்வரன், கீதா ஆகியோரின் உடல்களை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இந்த சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# போர் பதற்றம் முடிவுக்கு வந்திருப்பது வரவேற்புக்குரியது டி.டி.வி. தினகரன்



சென்னை, மே.12

காஷ்மீரின் பஹல்காம் பகுதியில் கடந்த ஏப்ரல் 22ந்தேதி பயங்கரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்பட்டு வந்த 9 பயங்கரவாத முகாம்களை இந்திய ராணுவம் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் தாக்கி அழித்தது.

இந்திய ராணுவத்தின் 'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை தொடர்ந்து இந்தியா பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் அதிகரித்த நிலையில், எல்லையில் அத்துமீறி இந்திய பகுதிகளை குறிவைத்து கடந்த சில தினங்களாக பாகிஸ்தான் தாக்க முயற்சித்தது. இந்த தாக்குதல் முயற்சிகளை இந்திய ராணுவம் தொடர்ந்து முறியடித்து வந்தது.

இந்த நிலையில் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளுக்கு பிறகு இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டதாக அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்துள்ளார். இதை இந்திய அரசும், பாகிஸ்தான் அரசும் உறுதி செய்துள்ளன.

இந்த நிலையில் போர் பதற்றம் முடிவுக்கு வந்திருப்பது வரவேற்புக்குரியது என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார். இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "இந்தியா பாகிஸ்தான் இடையே கடந்த சில நாட்களாக நீடித்து வந்த போர் பதற்றம் இருநாட்டு தலைவர்களின் ஒப்புதலோடு முடிவுக்கு வந்திருப்பது வரவேற்புக்குரியது.

பாகிஸ்தானின் தொடர் தாக்குதலில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்க அனைத்து விதமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு, பயங்கரவாதத்திற்குஎதிரானநடவடிக்கைகளில் உறுதியாக இருந்த பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கும், இந்திய பாதுகாப்புத்துறையின் முப்படை வீரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# தமிழகத்திலிருந்து பாகிஸ்தானுக்கு மருந்து ஏற்றுமதி நிறுத்தம்



சென்னை மே.12


இந்தியா பாகிஸ்தான் இடையே மோதல் அதிகரித்துள்ள நிலையில், இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பெற்று வரும் அனைத்து வகையான பலன்களையும், சலுகைகளையும் தடை செய்ய மத்திய அரசு முடிவு செய்தது. அதன்படி மருந்து ஏற்றுமதியை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

அந்த வகையில் தமிழகத்திலிருந்து பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மருந்துகள் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளன. உயிர் காக்கும் முக்கிய மருந்துகளுக்கான மூலப்பொருள்கள் எதுவும் இனி தமிழகத்திலிருந்து பாகிஸ்தானுக்கு அனுப்பப்பட மாட்டாது என்று மாநில மருந்து உற்பத்தியாளர்கள் திட்டவட்டமாக அறிவித்துள்ளனர்.

இதனால் ரூ.100 கோடி வரை வருவாய் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

இருப்பினும், நாட்டின் நலனைக் கருத்தில்கொண்டு இந்த முடிவை எடுத்துள்ளதாக மருந்து உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# இலங்கைக்கு கடத்த இருந்த 180 கிலோ கஞ்சா பறிமுதல் 3 பேர் கைது



ராமநாதபுரம், மே.12

ராமநாதபுரம் மாவட்டம், வேதாளை வடக்கு கடற்கரை வழியாக இலங்கைக்கு கடத்த இருந்த 180 கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல் செய்தனர். முன்னதாக வேதாளை வடக்கு கடற்கரை வழியாக இலங்கைக்கு கஞ்சா கடத்த இருப்பதாக சென்னை மத்திய புலனாய்வுப் பிரிவுக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இந்தத் தகவலின் அடிப்படையில், காவல் ஆய்வாளர் அன்பரசி தலைமையில் அமைக்கப்பட்ட சிறப்பு நடவடிக்கை குழு ராமேஸ்வரம், வேதாளைக்குச் சென்றது. அங்கு ராமநாதபுரம் மாவட்டம், வேதாளையைச் சேர்ந்த ஆர். சதீஸ்வரன் (20 வயது), என்பவரை நேற்று கைது செய்து விசாரணை மேற்கொண்டது. அவரிடம் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில், வைகை நகர் ரெயில் பாதை அருகே உள்ள முட்புதர்களில் இருந்து ரூ.18 லட்சம் மதிப்புள்ள 180 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

மேலும் இது தொடர்பாக, ராமநாதபுரம் வெத்தலையைச் சேர்ந்த எஸ். காமேஷ் (25 வயது), கே. வினோத் கண்ணன் (35 வயது) ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடம் மேற்கொண்ட விசாரணையில், வேதாளையைச் சேர்ந்த சசி மற்றும் கோபி ஆகியோர், வட மாநிலத்திலிருந்து கஞ்சாவை வாங்கி வந்து, அதனை படகு மூலம் இலங்கைக்கு கடத்த இருந்தது தெரிய வந்தது.

இதைத் தொடர்ந்து இந்த போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகள் அனைவரையும் கண்டுபிடிக்க, ராமநாதபுரம் போதைப்பொருள் நுண்ணறிவு பிரிவு போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# 14 ஆண்டுகளுக்கு முன்பு தமிழக பள்ளிக்கு வருகை தந்த போப் லியோ



சென்னை, மே.12

140 கோடி கத்தோலிக்கர்களின் தலைவராக இருந்த போப் பிரான்சிஸ் கடந்த மாதம் 21ந் தேதி உடல் நலக்குறைவால் காலமானார். இதைத் தொடர்ந்து கார்டினல்கள் ஒன்று சேர்ந்து புதிய போப் ஆண்டவரை தேர்வு செய்யும் பணியில் ஈடுபட்டனர். இது தொடர்பான வாக்கெடுப்பு வாடிகனில் உள்ள சிஸ்டைன் சிற்றாலயத்தில் பாரம்பரிய முறைப்படி நடைபெற்றது.

இந்த வாக்கெடுப்பின் முடிவில் வட அமெரிக்காவை சேர்ந்த கார்டினல் ராபர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட் என்பவர் கத்தோலிக்கர்களின் 267வது போப் ஆண்டவராக தேர்வு செய்யப்பட்டார். அவர் போப் 14ம் லியோ என அழைக்கப்படுவார் என்று கார்டினல்கள் அறிவித்தனர்.

இதையடுத்து போப் லியோவுக்கு பல்வேறு உலக நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர். தமிழ முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், "கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்துவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ள போப் 14ம் லியோ அவர்களுக்கு வாழ்த்துகள். அவரது அமைதி மற்றும் ஒற்றுமையின் செய்தி உலகம் முழுவதும் நல்லிணக்கத்தை ஊக்குவிக்கட்டும்" என்று தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில், போப் லியா சுமார் 14 ஆண்டுகளுக்கு முன்பு பாதிரியாராக இருந்தபோது தமிழகத்தில் உள்ள பள்ளிக்கு வருகை தந்துள்ளார் என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது. கடந்த 2006ம் ஆண்டு கேரள மாநிலம் ஆலுவாவில் நடைபெற்ற ஆசியபசிபிக் புனித அகஸ்டின் சபைக் கூட்டத்தில் பங்கேற்க வந்த பாதிரியார் ராபர்ட் பிரான்சிஸ் பிரிவோஸ்ட்(போப் லியோ), கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் உள்ள செண்பகம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளிக்கு வருகை தந்திருந்தார்.

தனது பயணத்தின் போது பொள்ளாச்சி அருகே ஜமீன் ஊத்துக்குளியில் உள்ள அகஸ்தீனிய பாதிரியார்களின் புனித மோனிகா சமூக மடத்திற்கு அவர் சென்றிருந்தார். மடத்தின் பாதிரியார்களுடன் ஒரு கூட்டுப் பிரார்த்தனையை நடத்திய அவர், அங்கிருந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாடினார்.

இந்தியாவில் உள்ள அகஸ்தீனிய சபையின் பிராந்திய தலைவரான பாதிரியார்வில்சன், பொள்ளாச்சியில் உள்ள பள்ளிக்கு போப் லியோ வருகை தந்த நினைவுகளை பகிர்ந்து கொண்டார். போப் லியோ மிகவும் அன்பான மற்றும் பணிவான மனிதர் என்றும், தனது வருகையின் போது மாணவர்களுக்கு அவர் மிகுந்த ஊக்கமளித்தார் என்றும் பாதிரியார் வில்சன் கூறினார்.

# திருமண தகவல் மைய நிறுவனருக்கு அரிவாள் வெட்டு வாலிபர் கைது

திருநெல்வேலி, மே.12

திருநெல்வேலி மாநகரம், சந்திப்பு பகுதியில் உள்ள தனியார் கட்டிடத்தில் பேட்டை கோடீஸ்வரன்நகர் பகுதியை சேர்ந்த கோபால் மகன் விஜயகுமார் (42) என்பவர் திருமண தகவல் மையம் ஒன்றை நடத்தி வருகிறார்.

அவரது அலுவலகத்தில் 7.4.2025 அன்று முதல் செல்வவடிவு என்பவர் பணிபுரிந்து வந்துள்ளார். அங்கே அவர் கடந்த மாதத்தில் பணிபுரிந்த 24 நாட்களுக்கு மட்டும் சம்பளம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு அவரின் உறவினரான மருதூரைச் சேர்ந்த காத்தமுத்து மகன் ரத்தினவேல்(27) என்பவர் தனது தங்கைக்கு ஆதரவாக, குறைவான சம்பளத்தை கொடுத்ததாக அந்த அலுவலகத்திற்குள் அத்துமீறி நுழைந்து விஜயகுமாரை அரிவாளால் தாக்கி ரத்த காயம் ஏற்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து விஜயகுமார் திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்.

மேலும் அவர் அளித்த புகாரின் பேரில் சந்திப்பு காவல் துறையினர் வழக்குப்பதிவு செய்து, ரத்தினவேலை கைது செய்து விசாரணை செய்தனர்.

# நெல்லை: முகநூலில் இருபிரிவினர் இடையே பிரச்சினையை தூண்டும் வசனம் பதிவு வாலிபர் கைது




திருநெல்வேலி மே.12

தென்காசி மாவட்டம், சிப்பிபாறை, பாறைபட்டி, கிழக்கு தெருவை சேர்ந்த காளிராஜ் மகன் மனோஜ்குமார் (வயது 19) சமூக வலைதளமான முகநூலில் இருதரப்பினருக்கிடையே பிரச்சினையை தூண்டும் வகையில் சர்ச்சைக்குரிய வசனங்கள் வைத்து சமூக வலைதளத்தில் பரப்பியுள்ளார். இது குறித்து மூன்றடைப்பு காவல்துறையினருக்கு தகவல் தெரியவந்தது.

இதையடுத்து சப்இன்ஸ்பெக்டர் முருகேஷ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சமூக வலைத்தளங்களில் இரு தரப்பினரிடையே பிரச்சினையை தூண்டும் விதமாக வசனங்களை பதிவிட்ட மனோஜ்குமாரை நேற்று கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

திருநெல்வேலி மாவட்ட காவல் துறையினர் சமூக வலைதளங்களை உன்னிப்பாக கண்காணித்து வருகின்றனர். இதுபோன்று பொது அமைதியை சீர்குலைக்கும் வகையில் சமூக வலைத்தளங்களில் பதிவு செய்து பரப்புபவர்கள் மீது வழக்குப்பதிவு செய்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் தெரிவித்துள்ளார்.

# நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னம் ஒதுக்கீடு






சென்னை, மே.12

சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி 2016ல் மெழுகுவர்த்தி சின்னத்திலும், 2019 முதல் 2021 வரை கரும்பு விவசாயி சின்னத்திலும் தேர்தலை சந்தித்தது. 2024 நாடாளுமன்ற தேர்தலின்போது தேர்தல் ஆணையத்திடம் தாமதமாக விண்ணப்பித்ததால் நாம் தமிழர் கட்சிக்கு கரும்பு விவசாயி சின்னம் கிடைக்கவில்லை. இதையடுத்து, தேர்தல் ஆணையம் வைத்துள்ள சின்னங்கள் பட்டியலில் இருந்து மைக் சின்னத்தை தேர்வு செய்து நாம் தமிழர் கட்சி போட்டியிட்டது. நாடாளுமன்ற தேர்தலில் 8.22 சதவீத வாக்குகளை பெற்ற நாம் தமிழர் கட்சி, மாநில கட்சி என்ற அங்கீகாரத்தைப் பெற்றது. இந்த நிலையில் மாநில கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னத்தை இந்திய தேர்தல் ஆணையம் ஒதுக்கியுள்ளது. அதன்படி, கலப்பையுடன் விவசாயி இருப்பது போன்ற சின்னம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சின்னத்தின் புகைப்படத்தை பகிர்ந்துள்ள சீமான், "மாநில கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட நாம் தமிழர் கட்சிக்கு விவசாயி சின்னத்தை இந்திய தேர்தல் ஆணையம் ஒதுக்கீடு செய்து அறிவித்துள்ளது" என்று தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் வாரந்தோறும் மருத்துவ முகாம் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு

சென்னை, மே.12

தமிழகத்தில் வாரந்தோறும் மருத்துவ முகாம் நடைபெறும் என அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவித்துள்ளார் . இது தொடர்பாக அவர் கூறியதாவது ,

இந்த மாதம் முதல் ஜனவரி 4ம் வாரம் வரை 1256 உயர் சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட உள்ளது.இந்த முகாமை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் விரைவில் தொடங்கி வைப்பார். அதன்பிறகு ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரத்தில் ஒரு நாள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை முகாம்கள் இயங்கும்.இந்த மாதம் முதல் ஜனவரி 2026 வரை திட்டமிடப்பட்டு உள்ளது. இந்த



முகாம்களில் ஈ.சி.ஜி. இதய சுருள் அறிக்கை, எக்கோகார்டியோகிராம், எக்ஸ்ரே, அல்ட்ராசவுண்ட் ஸ்கேன், காசநோய் மற்றும் தொழுநோய் கண்டறிதல் சோதனைகள், ஆரம்பகட்ட புற்றுநோய் கண்டறிதல் பரிசோதனைகள், பெண்களுக்கான கர்ப்பப்பை வாய் புற்றுநோய் பரிசோதனை உள்ளிட்ட சோதனைகள் நடக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

## நாட்டை அவமதிக்கும் வகையில் யார் பேசினாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்: வானதி சீனிவாசன்

கோயம்புத்தூர், மே.12

பா.ஜ.க. எம்.எல்.ஏ. வானதி சீனிவாசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

நமது அண்டை நாடான பாகிஸ்தான், எப்போதுமே இந்தியாவுடன் நேரடியாக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாமல், பயங்கரவாதிகளை ஏவிவிட்டு, அவர்கள் வாயிலாக பயங்கரவாத தாக்குதல்களைநடத்தி,அப்பாவி பொதுமக்களை கொன்று குவிப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறது. இப்படி பாகிஸ்தான் தூண்டுதலில், பயங்கரவாத தாக்குதல்கள் நடக்கும் போதெல்லாம், இந்தியா கண்டனம் தெரிவிக்கும். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் பல்வேறு நாடுகளின் ஆதரவைக் கோரும். ஆனால், "நாங்கள் தாக்குதல் நடத்தவில்லை. பயங்கரவாதிகளின் தாக்குதலுக்கும் எங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை அதற்கு என்ன ஆதாரம்?" என்று கேட்டு பாகிஸ்தான் நாடகமாடும். பயங்கரவாத தாக்குதலின் பின்னணியில்பாகிஸ்தான்இருப்பதற்கான ஆதாரங்களை இந்தியா கொடுத்தாலும், அதன்மீது ஐக்கிய நாடுகள் சபையும், மற்ற நாடுகளும் எந்த நடவடிக்கையும் எடுத்ததில்லை. எடுக்க முடிந்ததும் இல்லை.

கடந்த 2008ம் ஆண்டு நவம்பரில், மும்பையில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 160 பேர் கொல்லப்பட்டனர். அன்றைய காங்கிரஸ் தி.மு.க. கூட்டணி அரசு, எதிர் தாக்குதல் நடத்தாமல், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக நாடுகளை அணுகியது. இந்திய ராணுவமும், உளவு அமைப்புகளும், பாகிஸ்தானின் பயங்கரவாத பின்னணியை அம்பலப்படுத்தின. பாகிஸ்தான் தொடர்பான ஆதாரங்களையும் கொடுத்தது. ஆனால் பாகிஸ்தான் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இதுதான் காலங்காலமாக நடந்துகொண்டிருக்கிறது.

ஆனால், இந்தியாவில் இருக்கும் பா.ஜ.க. எதிர்ப்பாளர்கள், பா.ஜ.க.வையும், பிரதமர் மோடியையும் எதிர்ப்பதாக நினைத்துக் கொண்டு, இந்தியாவையும் இந்திய ராணுவத்தையும் அவமதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தனியார் செய்தி தொலைக்காட்சி விவாதம் ஒன்றில், தமிழ்த் தேசிய இயக்கத்தை சேர்ந்த தியாகு என்பவர், "பயங்கரவாதிகளின் தாக்குதலையும் கண்டிக்கிறோம். பாகிஸ்தான் தாக்குதலையும் கண்டிக்கிறோம். இந்திய அரசின் தாக்குதலையும் கண்டிக்கிறோம்" என்று பயங்கரவாதிகளின் தாக்குதலையும் இந்திய ராணுவத்தின் தாக்குதலையும் ஒன்றுபோல, ஒற்று



மைப்படுத்தி பேசியிருக்கிறார். இது கடும் கண்டனத்திற்குரியது. இந்த பேச்சு தேசத்திற்கு எதிரானது மட்டுமல்ல இந்திய ராணுவத்தை அவமதிக்கும் செயல். ஒரு காலத்தில், வன்முறையை கையாண்டு, அதற்காக மரண தண்டனை விதிக்கப்பட்டவர்தான் இந்த தியாகு. அப்படிப்பட்டவர், 140 கோடி மக்களையும் காப்பதற்காக, இந்திய ராணுவம் உயிரைக் கொடுத்து போராடிக் கொண்டிருக்கும்போது, அதனை கொச்சைப்படுத்தும் வகையில் பேசியிருப்பதை ஏற்க முடியாது. இதை எதுவும் நடக்காது போல தி.மு.க. அரசு வேடிக்கைபார்க்ககூடாது. அவர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தியா போன்று 140 கோடி மக்கள் தொகை கொண்ட உலகின் மிகப் பெரியஜனநாயகநாட்டை, சிறு சிறு பயங்கரவாத குழுக்களை உருவாக்கி, அதன் வாயிலாக தாக்குதல் நடத்தி அச்சுறுத்துவதை எத்தனை காலத்திற்குதான் பொறுத்துக் கொள்ள முடியும்? இந்தியா எப்போதும் போரைவிரும்பியது இல்லை. ஆனால் எத்தனை காலத்துக்குதான் அடி வாங்கிக் கொண்டே இருக்க முடியும்? இந்திய ராணுவம் போரை முன்னெடுக்கவில்லை. அப்பாவி பொது மக்களை கொண்டு குவித்த பயங்கரவாதிகளுக்கு பதிலடி கொடுக்க, எதிர் தாக்குதலை நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த உண்மையை அனைவரும் உணர வேண்டும். 140 கோடி மக்களை காக்க இந்திய ராணுவ வீரர்கள் எல்லையில் உயிரை பணயம் வைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் அரசியல், மதம், சாதி, மொழி, இனம் என அனைத்து வேறுபாடுகளையும் மறந்து, நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். இந்ததருணத்தில் பா.ஜ.க. எதிர்ப்பாளர்கள், தங்களது தேச விரோத முகத்தை காட்டி வருவது கடும் கண்டனத்திற்குரியது. இதை வழக்கம் போல அரசியலாக தமிழக அரசு கடந்து விடக்கூடாது. குறிப்பாக காவல்துறை கடந்து விடக்கூடாது. இந்திய ராணுவத்திற்கு எதிராக நாட்டை அவமதிக்கும் வகையில் யார் பேசினாலும் அவர்கள்மீது கடும்நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தான் என்ற நாடு வரைபடத்தில் இருக்காது அண்ணாமலை

தூத்துக்குடி, மே.12

கன்னியாகுமரியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக முன்னாள் பாஜக மாநில தலைவர் அண்ணாமலை சென்னையிலிருந்து இன்று விமானம் மூலம் தூத்துக்குடி விமான நிலையம் வந்தார்.

இதனைத்தொடர்ந்து விமான நிலையத்தில், செய்தியாளர்களிடம் பேசிய அவர், "இந்தியா பாகிஸ்தான் பிரச்னை இன்று நேற்று அல்ல. பாகிஸ்தான் செய்யும் தவறுகளுக்கு நாம் கொடுக்கக் கூடிய பதிலடி அறத்தின் அடிப்படையில் உள்ளது.

பாகிஸ்தான் இந்தியாவில் 20க்கும் மேற்பட்ட பொதுமக்களை கொன்றுள்ளது. துணை கலெக்டர் நிலையில் உள்ள அதிகாரியையும் கொலை செய்துள்ளனர். டிரோன்களை நமது நாட்டுக்குள் அனுப்பி தாக்குதல் நடத்தி உள்ளனர். இந்தியா, பாகிஸ்தான் தீவிரவாதிகள் செய்த தவறுக்கு பாகிஸ்தானில் இருக்கக்கூடிய



தீவிரவாதிகள்மீது மட்டும் தாக்குதல் நடத்துகின்றனர். பாகிஸ்தான் என்ன செய்கிறது இந்தியாவில் உள்ள அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துகிறது.

இந்தியா மிகப்பெரிய பொருளாதார நாடு. இந்தியாவின் பொருளாதாரத்தில் 12ல் ஒரு பங்கு தான் பாகிஸ்தான் பொருளாதாரம். நாம் எந்த நாட்டின் எல்லையையும் பிடிப்பதற்காக சண்டை போடவில்லை. நமது நாட்டு மீது நடத்தப்பட்டுள்ள தீவிரவாத தாக்குதலுக்குதான் பதில் தாக்குதல் நடத்துகிறோம்.

இந்தப் போர் இன்றோ, நாளையோ முடிவடைய போவது கிடையாது. இந்தப்போர்தீவிரவாதத்திற்கு எதிராக நடக்கிறது.

இது இப்போது முடியாது.

இந்தியாவின் நடவடிக்கையை பார்த்த பிறகு பாகிஸ்தான் இந்தியாவில் ஓர் உயிரை எடுப்பதற்கு பயப்பட வேண்டும்.

பாகிஸ்தான் நாடு பாகிஸ்தான் கட்டுப்பாட்டில் இல்லை. பாகிஸ்தானில் நாட்டுக்கு ராணுவம் அல்ல. ராணுவத்திற்கு ஒரு நாடு. ராணுவம் தான் அந்த நாட்டு அரசை கட்டுப்படுத்துகிறது. பாகிஸ்தான் என்ற நாடு வரைபடத்தில் இருக்காது. நாம் அவ்வளவு பலமாக இருக்கிறோம். நாம்நினைத்தால் ஒன்றும் இல்லாமல் பண்ணி விடலாம். ஆனால் அறத்தின் அடிப்படையில் போர் தொடுத்து வருகிறோம். சசிதரூர் எம்பி, இந்திய அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்து வருகிறார். பாகிஸ்தானை எதிர்ப்பதில் அனைவரும் ஒன்றாக இருக்கிறார்கள்.

தமிழகத்தில் முதல்அமைச்சர் ராணுவ வீரர்களுக்காக முன்னெடுக்கும் பேரணி வரவேற்கத்தக்கது. அதே நேரத்தில் முதல்அமைச்சரும் இந்திய அரசுக்கு இந்த நேரத்தில் தனது முழு ஒத்துழைப்பை கொடுக்க வேண்டும்" என்று அண்ணாமலை கூறினார்.

## எல்லையில் பாகிஸ்தான் தாக்குதல்: பஞ்சாப்பில் இருந்து திரும்பிய தமிழக மாணவர்கள்

சென்னை, மே.12

பாகிஸ்தானுக்கும், இந்தியாவுக்கும் இடையே போர் பதற்றம் அதிகரித்து வரும் நிலையில், வட மாநிலங்களில் படித்து வரும் தமிழக மாணவர்களை பத்திரமாக மீட்க முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

எல்லையில் பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வரும்நிலையில், பஞ்சாபில் சிக்கிக் கொண்ட தமிழ்நாடு மாணவர்கள் அரசின் உதவியால் பத்திரமாக சென்னை திரும்பி உள்ளனர். இதன்படி பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் இருந்து 5 மாணவர்கள் விமானம் மூலம் சென்னை வந்தடைந்தனர். விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மாணவர்கள், தாங்கள் தங்கியிருந்த இடத்தில் டிரோன் தாக்குதல் நடந்ததாகவும், பாதுகாப்புக் கருதியே அங்கிருந்து புறப்பட்டு சென்னை வந்து சேர்ந்ததாகவும், பல மாணவர்கள் தொடர்ந்து சென்னை திரும்பிக்கொண்டிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் அங்கு நிலைமை சரியில்லாத காரணத்தால் பஞ்சாபில் இருந்து புறப்பட்டு தழிழகம் வந்துவிட்டோம் என்றும், தமிழ்நாட்டை சேர்ந்த மேலும் 7 மாணவர்கள் இன்று பிற்பகலில் சென்னை வர உள்ளனர் என்றும் மாணவர்கள் கூறினர்.

முன்னதாக காஷ்மீரில் படித்து வரும் தமிழக மாணவர்கள்52பேரின்பாதுகாப்புமுதல்அமைச்சர்மு.க.ஸ்டாலின் உத்தரவின்பேரில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்திருந்தது. அவர்களை அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அமைச்சர் டிஸ்சார்ஜ்

சென்னை, மே.12

தி.மு.க., பொதுச் செயலரும், அமைச்சருமான துரைமுருகன்(86), நெஞ்சு பகுதியில் அசவுகரியம் மற்றும் சளித்தொற்று காரணமாக, நேற்று முன்தினம் அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில், அவரது உடல்நிலை தற்போது சீராகியுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்ததை அடுத்து, துரைமுருகன் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டார்.

## "தேசிய பாதுகாப்பு நிதிக்கு" நன்கொடை வழங்கும் இளையராஜா

சென்னை, மே.12

இந்தியா பாகிஸ்தான் போர் பதற்றம் உச்சத்தை தொட்டுள்ளது. இந்தியாவின் எல்லையோரபகுதிகளில் உள்ள கிராமங்களை குறிவைத்து பாகிஸ்தான் தாக்குதல் நடத்தி வருகிறது. அதுமட்டும் இன்றி முக்கியமான இடங்களை குறிவைத்து டிரோன்களையும் பாகிஸ்தான் ஏவி வருகிறது. பாகிஸ்தானின் அத்துமீறிய செயலுக்கு இந்தியா, தக்க பதிலடியை கொடுத்து வருகிறது. கடந்த மூன்று தினங்களாக பாகிஸ்தானின் அத்துமீறல் தொடர்வதால் எல்லையில் போர்மேகம் சூழ்ந்துள்ளது.



இந்நிலையில், இசையமைப்பாளர் இளையராஜா,"தேசிய பாதுகாப்பு நிதிக்கு" நன்கொடைஅளிக்க முடிவு செய்துள்ளதாக கூறியுள்ளார். இது தொடர்பாகஅவர்வெளியிட்டுள்ள பதிவில்,

"என் நாடு மீது பெருமிதம் கொண்ட ஒரு இந்தியனாகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், என் இசை வேலியன்ட் நிகழ்ச்சிகளில் கிடைத்த தொகையும், ஒரு மாத சம்பளமும் சேர்த்து, "தேசிய பாதுகாப்பு நிதிக்கு" நன்கொடையாக அளிக்க முடிவு செய்துள்ளேன்.

இந்த நன்கொடை என் "வேலியன்ட்" இசைக்கு மட்டும் அல்ல – நம் நாட்டின் வீரர்களின் வலிமைக்கும், தீவிரவாதத்தை ஒழிக்க அவர்கள் காணும் தியாகத்திற்கும் உரிய மரியாதை" என்று தெரிவித்திருக்கிறார்.

## முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் பயனாளிகளுக்கு மானியத் தொகை: முதல்அமைச்சர் வழங்கினார்

சென்னை, மே.12

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று (10.5.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு மாநில ஹஜ் குழு மூலம் முதல் முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்பவர்களுக்கு ஹஜ் மானியமாக 5,650 பயனாளிகளுக்கு தலா ரூ.25,000/ வீதம் மானியத் தொகை வழங்கிடும் அடையாளமாக, 10 பயனாளிகளுக்கு ஹஜ் மானியத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்.

2024, 25ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், முதல்அமைச்சர் அவர்களின் அறிவுரைக்கிணங்க, முதல் முறையாக ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் தகுதி வாய்ந்த ஹஜ் பயணிகள் ஒவ்வொருவருக்கும் ஹஜ் மானியத் தொகை இந்த ஆண்டு முதல் 25,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இந்த ஆண்டு தமிழ்நாடு





அரசால், 14 கோடியே 12 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயணி ஒருவருக்கு ரூ.25,000 வீதம் 5,650 பயனாளிகளுக்கு இம்மானியத் தொகை வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்தும் விதமாக, 10 பயனாளிகளுக்கு முதல்அமைச்சர் இன்று தலா ரூ.25,000க்கான காசோலைகளை ஹஜ் மானியத் தொகையாக வழங்கினார். என தெரிவிக்கப்பட்டுள்ளது .

## நெல்லை: பணத்தை திருப்பி கொடுக்காதவரை அரிவாளால் வெட்டியவர் கைது

திருநெல்வேலி, மே.12

நெல்லை மாவட்டம், திசையன்விளை, விஜய அச்சம்பாடு, மேலதெருவை சேர்ந்த சுரேஷ்குமார் (வயது 42) தம்பியான கனகராஜ் அதே ஊரைச் சேர்ந்த சுந்தர்(50) என்பவரிடம் கடனாக ரூ.300 வாங்கி திருப்பி கொடுக்காமல் இருந்துள்ளார். இந்த நிலையில் 8.5.2025 அன்று சுரேஷ்குமார் தனது வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த சுந்தர், சுரேஷ்குமாரிடம் உன் தம்பி வாங்கிய பணத்தை திருப்பி கொடு என்று கேட்டுள்ளார். அதற்கு சுரேஷ்குமார் பிறகு தருகிறேன் என்று கூறியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சுந்தர்,





சுரேஷ்குமாரை அவதூறாக பேசி அரிவாளால் தாக்கி ரத்தக்காயம் ஏற்படுத்தி மிரட்டல் விடுத்து சென்றுள்ளார். இதுகுறித்து சுரேஷ்குமார் திசையன்விளைகாவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்அடிப்படையில் சப்இன்ஸ்பெக்டர் ராமநாதன் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு சுந்தரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்தார்.

## சாலையில் விழுந்து கிடந்த மின் ஒயர்கள் சரிசெய்யப்பட்டன

அரியலூர், மே.12

அரியலூர் ஜெயங்கொண்டம் சாலையானது நகரின் முக்கிய சாலைகளில் ஒன்றாக உள்ளது. கடைகள், வீடுகள், நகராட்சி அலுவலகம், போலீஸ் நிலையம் என அதிகளவில் பொதுமக்கள் கூடும் பகுதியாக உள்ளது. இதனால் இந்த சாலையில் எப்போதும் வாகனங்கள் சென்றவாறும், சில சமயங்களில் போக்குவரத்து நெரிசல் மிகுந்தும் காணப்படும்.

இந்நிலையில், இந்த சாலையின் நடுவே



சிமெண்டால் ஆன தடுப்புக்கட்டைகள் அமைக்கப் பட்டுள்ளன. சாலைகளின் நடுவே செல்லும் மின் ஒயர்கள் இந்த தடுப்புக்கட்டையின் வழியே செல்லும் வகையில் அமைக்கப் பட்டுள்ளது. ஆனால் பல இடங்களில் இந்த மின் ஒயர்கள் சாலையில் விழுந்து கிடப்பதால் இருசக்கர வாகன ஓட்டிகள் விபத்தில் சிக்கும் அபாயம் உள்ளது என "தினத்தந்தி" நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. இதனை அறிந்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து சாலையில், விழுந்து கிடந்த மின் ஒயர்களை சரி செய்தனர். இதற்கு செய்தி வெளியிட்ட "தினத்தந்தி" நாளிதழுக்கும், நடவடிக்கை எடுத்த அதிகாரிகளுக்கும் இப்பகுதி மக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் நன்றி தெரிவித்தனர்.

## நெல்லை: மூதாட்டியை பாலியல் பலாத்காரம் செய்து 2 சவரன் தங்க சங்கிலி பறிப்பு வாலிபர் கைது, தங்க சங்கிலி மீட்பு

திருநெல்வேலி, மே.12

நெல்லை மாவட்டம், பணகுடி, பெருங்காளியாபுரம் கிராமத்தைச் சேர்ந்த 60 வயது பெண்மணி நேற்று தனது வீட்டின் அருகே உள்ள தோட்டத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சமயத்தில், காவல்கிணறை சேர்ந்த ஒரு வாலிபர் தனது மோட்டார் சைக்கிளில் வந்து மேற்சொன்ன மூதாட்டியை பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்தபோது, அந்த மூதாட்டிசத்தம்போடவே, அவரை தாக்கிவிட்டு, பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். அதன் பின்னர் அந்த மூதாட்டியிடம் இருந்து சுமார் 2 சரவன் எடையுள்ள தங்கச் சங்கிலியை அந்த வாலிபர் பறித்துச் சென்றுள்ளார்.

இதுகுறித்து தகவல் கிடைத்தவுடன் சம்பவ இடத்திற்கு திருநெல்வேலி மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் விரைந்து சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட பெண்மணி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டு அதன் அடிப்படையில் வள்ளியூர் அனைத்துமகளிர்போலீஸ்





இன்ஸ்பெக்டர் சாந்தி வழக்கு பதிவு செய்தார்.

இதனையடுத்து மாவட்ட எஸ்.பி. சிலம்பரசன் உத்தரவுப்படி, வள்ளியூர் டி.எஸ்.பி. வெங்கடேசன் தலைமையில் 5 தனி படைகள் அமைக்கப் பட்டு, குற்றவாளியை கைது செய்யும் பணி முடுக்கி விடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, போலீசார் குற்றவாளியை கைது செய்தனர். கைது செய்யப்பட்ட குற்றவாளியிடம் இருந்து மூதாட்டியிடம் பறிக்கப்பட்டதங்க சங்கிலி மீட்கப்பட்டது. புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இக்குற்ற சம்பவத்தில், சம்பவம் நடைபெற்ற சில மணி நேரத்திலேயே குற்றவாளியை கைது செய்த வள்ளியூர் டி.எஸ்.பி. மற்றும் தனிப்படையினரை மாவட்ட எஸ்.பி. பாராட்டினார்.

## மாம்பழம் பறிக்க முயன்றபோது மரத்தில் இருந்து தவறி விழுந்து மாணவன் உயிரிழப்பு

கன்னியாகுமரி, மே.12

கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் அருகே முளங்குழி வாறவிளையை சேர்ந்தவர் பிரகாஷ். இவருடைய மனைவி ஜாஸ்மின் ஷைனி. இந்த தம்பதியின் மூத்த மகன் அபிஷேக் (வயது 16). அந்த பகுதியில் உள்ள ஒரு அரசு மேல்நிலைப்பள்ளியில் பிளஸ் 1 பயின்று வந்தார். அவர் தேர்வு எழுதிய நிலையில் அதன் முடிவுக்காக காத்திருந்தார்.

இந்நிலையில், கோடை விடுமுறையில் இருந்த அபிஷேக் சூசைபுரம் பகுதியில் உள்ள தன்னுடைய நண்பருடன் விளையாடினார். அப்போது அதே பகுதியில் உள்ள ஒரு மாமரத்தில் ஏறி மாம்பழம் பறிக்க முயன்றார்.

அப்போது எதிர்பாராத விதமாக மா மரத்தின் கிளை திடீரென்று ஒடிந்தது. இதனால் மரத்தில் இருந்து கீழே விழுந்த அபிஷேக் படுகாயம் அடைந்தார். உடனே பிரகாசை மீட்ட அக்கம்பக்கத்தினர் அவரை குழித்துறை அரசு மருத்துவமனையில் அனுமதித்தனர். அங்கு பிரகாசை பரிசோதித்த டாக்டர், அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தார். இந்த சம்பவம் குறித்து மார்த்தாண்டம் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். மாமரத்தில் ஏறி மாம்பழம்



பறித்த போது மரக்கிளை ஒடிந்ததால் தவறி விழுந்து மாணவர் பலியான சம்பவம் அந்த பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

12.5.2025

## "தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக வளர்ந்து வருகிறது": பிரதமர் மோடி பெருமிதம்

புதுடெல்லி

தேசிய தொழில்நுட்ப தினத்தையொட்டி வாழ்த்து தெரிவித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, தொழில்நுட்பத்தில் இந்தியா முன்னணி நாடாக வளர்ந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், "தேசிய தொழில்நுட்ப தின வாழ்த்துகள்! நமது விஞ்ஞானிகளுக்கு பெருமை சேர்க்கவும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கவும், 1998ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொக்ரான் சோதனைகளை நினைவுகூரவும் இந்த நாள் கொண்டாடப்படுகிறது. அவை நமது நாட்டின் வளர்ச்சிப் பாதையில், குறிப்பாக தன்னம்பிக்கைக்கான நமது தேடலில் ஒரு முக்கிய நிகழ்வாக இருந்தன.



நமது மக்களால் முன்னேறிச் செல்லும் இந்தியாவானது விண்வெளி, செயற்கை நுண்ணறிவு, டிஜிட்டல் கண்டுபிடிப்பு, பசுமை தொழில்நுட்பம் உட்பட பல தொழில்நுட்பங்களில், பல்வேறு அம்சங்களில் உலகளாவிய முன்னணி நாடாக வளர்ந்து வருகிறது.

அறிவியல் ஆராய்ச்சி மூலம் எதிர்கால சந்ததியினருக்கு அதிகாரம் அளிப்பதற்கான எங்கள் செயல்பாடுகளை நாங்கள் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம். தொழில்நுட்பம் மனிதகுலத்தை மேம்படுத்தட்டும். நமது தேசத்தைப் பாதுகாக்கட்டும். எதிர்கால வளர்ச்சியைத் தூண்டட்டும்." என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## செய்யாறில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பிறந்தநாள் விழா ஒட்டி 45 பேர் ரத்ததானம்



செய்யாறில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பிறந்தநாள் விழா ஒட்டி 45 பேர் நேற்று ரத்ததானம் செய்தனர். திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் மாவட்ட தொழில்நுட்பு பிரிவு மற்றும் அண்ணா தொழிற்சங்கம் சார்பில் செய்யாறு தலைமை மருத்துவமனையுடன் இணைந்து அதிமுக பொது செயலாளரும் தமிழக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிச்சாமியின் 71 வது பிறந்தநாள் விழா முன்னிட்டு ரத்த தான முகாம் தகவல் தொழில்நுட்ப பிரிவு மாவட்ட செயலாளர் டி.தவமணி தலைமையில் அண்ணா தொழிற்சங்க மாவட்ட செயலாளர் ஏ.அருணகிரி முன்னிலையில் நேற்று நடந்தது நகர செயலாளர் கே.வெங்கடேசன் வரவேற்றார். சிறப்பு அழைப்பாளர்களாக திருவண்ணாமலை மாவட்ட செயலாளர் தூசி கே.மோகன், முன்னாள் அமைச்சர் முக்கூர் என்.சுப்பிரமணியன் ஆகியோர் கலந்துகொண்டு ரத்ததானம் முகாமை தொடங்கி வைத்தனர். இந்த ரத்த தானம் முகாமில் அதிமுகவினர், தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்கள் என 45 பேர் ரத்தம் தானம் செய்தனர். நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள், ஜனார்த்தனன், சுப்பராயன், மெய்யப்பன், முனுசாமி, ரவிச்சந்திரன், கோபால், கோவிந்தராஜ், அருண், அரவிந்த், பாராசூர் பெருமாள், அரங்கநாதன், துரை, இளையராஜா, செந்தில், கன்னியப்பன், பொன் அருளானந்தம், சேகர், தணிகாசலம், எழிலரசன், அபிராமி சுரேஷ், பாலாஜி, மகாதேவன், சுரேஷ், சக்தி, ராஜா, வெற்றிச்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

## காஞ்சிபுரத்தில் ஸ்ரீ விஜய கணபதி, ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர், ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீ மகாலட்சுமி நகர், ராயல் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ விஜய கணபதி, ஸ்ரீ லட்சுமி ஹயக்ரீவர் ,ஸ்ரீ பக்த ஆஞ்சநேயர் திருக்கோவிலில் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது விழாவில் சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் ஓத கோ பூஜை, கணபதி பூஜை, யாகசாலை பூஜைகள், உள்ளிட்ட சிறப்பு பூஜைகள் நடைபெற்று புனித நீர் கலசம்



கோவில் பிரகாரத்தை சுற்றி வந்து கோபுரத்தின் மீது புனித நீர் ஊற்றி தீபாவாரதனை செய்து பொதுமக்கள் வழிபட்டனர். மகா கும்பாபிஷேகத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் தலைமை குருக்கள் பாஸ்கர் ஐயர் வெகு சிறப்பாக செய்திருந்தார் பிறகு வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் கோயில் பிரசாதம் வழங்கப்பட்டன. பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்து வழிபட்டு சென்றனர்.

## வனத்துறை மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்திய புகைப்பட கண்காட்சி: கலெக்டர் பார்வை


ஊட்டி, மே.12

நீலகிரி மாவட்டம், உதகை பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில், கோடை விழாவினை முன்னிட்டு, வனத்துறை மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து நடத்திய மாவட்டத்தின் இயற்கை எழில் குறித்த புகைப்பட கண்காட்சி மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர் மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் கோடை விழா மே மாதத்தில் மாவட்ட நிர்வாகம், சுற்றுலாத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் பிறத்துறைகளுடன் இணைத்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், மாவட்ட வனத்துறை மற்றும் சுற்றுலாத்துறை இணைந்து இந்த புகைப்பட கண்காட்சி 10 05 2025 இன்று தொடங்கி 31 05 2025 வரையில் நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில், நீலகிரி மாவட்டத்தின் இயற்கை எழில் குறித்த புகைப்படங்கள், வனவிலங்குகள் மற்றும் பாரம்பரிய கட்டிடம் போன்ற சிறப்புமிகு வண்ண புகைப்படங்கள், பழங்குடியினர் மக்களின் கலாச்சாரம் குறித்த புகைப்படங்கள், இயற்கை வனப்புடைய நிலங்கள் குறித்த புகைப்படங்கள் போன்ற புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புகைப்பட கண்காட்சியினை பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் இலவசமாக கண்டுகளிக்கலாம் என மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

## பாலியல்தொல்லையால் கொன்று புதைத்த திருநங்கை



நெய்க்காரப்பட்டியைச் சேர்ந்தவர் முத்துச்சாமி (31). அவரது மனைவி மாரியம்மாள். இவர்கள், உறவினரான திருநங்கை வைதேகி உடன் சித்தரேவில் வீடு வாடகைக்கு எடுத்து தங்கியுள்ளனர். இந்நிலையில், முத்துசாமியை காணவில்லை என, மாரியம்மாள் போலீசில் புகார் அளித்தார். விசாரணையில் முத்துசாமி பாலியல் தொல்லை கொடுத்ததால், திருநங்கை வைதேகி வீட்டின் அருகே கொன்று புதைத்தது தெரியவந்தது..

## மதுரை புதூர் பகுதிக்கு வந்த அழகர். அழகரை காண வந்த பக்தர்களுக்கு நீர் மோர் வழங்கிய இஸ்லாமியர்கள்

மதுரை அழகர்கோவில் மலை அடிவாரத்தில் உள்ள கள்ளழகர் திருக்கோவில் சித்திரை திருவிழா கடந்த 8 ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கிய நிலையில் நேற்று மாலை சுந்தர்ராஜன் பெருமாள் கள்ளழகர் வேடமுண்டு மண்டுக முனிவருக்கு சாப விமோசனம் அளிப்பதற்காக தங்க பல்லாக்கில் அழகர் மலையிலிருந்து நேற்று மாலை மதுரையை நோக்கி புறப்பட்டார்.

தற்போது மதுரை மாநகர் பகுதியான மூன்றுமாவடி, புதூர் ஆகிய பகுதிகளில் கண்டாங்கி பட்டுடுத்தி தங்க பல்லாக்கில் எழுந்தருளிய கள்ளழகருக்கு எதிர் சேவை வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது. ஏராளமான பக்தர்கள் கையில் சக்கரை தீபம் வைத்து ஆங்காங்கே வழிநெடுக திருக்கண் வைத்து வழிபட்டு வருகின்றனர்.

பக்தர்கள் கூட்டத்தில் கள்ளழகர் தங்க பல்லாக்கில் வருகை தர பக்தர்கள் கோவிந்தா...! கோவிந்தா...! என கோஷங்கள் எழுப்பி வருகின்றனர்.



மேலும்., வெயிலின் தாக்கத்தில் இருந்து பக்தர்களை காத்திட பலரும் நீர்மோர், ரஸ்னா, ரோஸ் மில் ஆகியவை கொடுத்து தாகம் தீர்த்து வருகின்றனர். கள்ளழகர் தற்போது மதுரை புதூர் பகுதிக்கு வந்த நிலையில் கள்ளழகரை தரிசனம் செய்ய வந்த பக்தர்களுக்கு மத நல்லிணக்கத்தை எடுத்துக்காட்டும் வகையில் புதூர் பகுதியில் உள்ள இஸ்லாமிய பெருமக்கள் நீர்மோர் பந்தல் அமைத்து கள்ளழகரை வரவேற்க வந்த பக்தர்களுக்கு நீர்மோர் வழங்கி வருகின்றனர்.

## மீண்டும் பாடல் காப்பி சர்ச்சையில் சிக்கிய அனிருத்



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் ரஜினிகாந்த்தின் 171வது படமாக கூலி திரைப்படம் தயாராகி வருகிறது. இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. கூலி திரைப்படம் வருகிற ஆகஸ்ட் மாதம் 14ந்தேதி திரைக்கு வர உள்ளது. இப்படத்தை சன் பிக்சர்ஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இத்திரைப்படத்தில் ரஜினிகாந்த் உடன் சுருதிஹாசன், நாகார்ஜுனா, உபேந்திரா, சத்யராஜ், அமீர் கான் என மிகப்பெரிய நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளது. இதில் பூஜா ஹெக்டே சிறப்பு நடனம் ஆடியுள்ளார்.

இந்நிலையில் 'கூலி' திரைப்படம் வெளியாக 100 நாட்கள் எஞ்சியிருந்த நிலையில், படத்தின் முன்னோட்ட டீசரை படக்குழு வெளியிட்டிருந்தது. அனிருத்தின் இசையில், படத்தின் முக்கிய கதாபாத்திரங்களை முகம் காட்டாமல் அடையாளப்படுத்தும் வகையில் இந்த டீசர் உருவாகியிருந்தது. 'அரங்கம் அதிரட்டும், விசில் பறக்கட்டும்' என்கிற வரிகளுடன், இந்த டீசர் வெளியிடப்பட்டது. இந்த டீசர் இசைதான் சமூக ஊடகங்களில் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த டீசருக்காக அமெரிக்க ராப் பாடகர் லில் நாஸ் எக்ஸ் என்பவரின் 'இன்டஸ்ட்ரி பேபி' பாடலை, அனிருத் காப்பியடித்திருப்பதாக, சமூக வலைதளத்தில் ஆதாரத்துடன் பலரும் சொல்லி வருகின்றனர். இருந்தாலும் 'கூலி' படத்தின் அந்த டீசர் வைரலாகி விட்டது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் அனிருத் மீதான, சர்ச்சை வளர்ந்து கொண்டே செல்வது அவரது ரசிகர்களை வருத்தம் கொள்ளச் செய்துள்ளது.

இசையமைப்பாளராக அனிருத்தின் பல பாடல்கள் சர்ச்சையிலும் சிக்கி விடுகின்றன. அவர் இசையமைக்கும் பாடல்கள், மேல் நாட்டு இசையில் இருந்து காப்பி அடிக்கப்பட்டவை என்ற கருத்து பல காலமாக சொல்லப்பட்டு வருகிறது. அந்த வரிசையில் கடந்த ஆண்டு தெலுங்கில் வெளியான 'தேவரா' படத்தில் இடம்பெற்ற 'சுட்டாமலே..' பாடலையும், அவர் காப்பி அடித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

## "பிரமயுகம்" பட இயக்குனரின் புதிய பட டைட்டில் வெளியீடு




மலையாள சினிமாவில் 'ரெட் ரெயின்' என்ற திரில்லர் படம் மூலமாக இயக்குனரானவர், ராகுல் சதாசிவன். இவரது இயக்கத்தில் மம்முட்டி நடித்து 2024ம் ஆண்டு வெளியான 'பிரமயுகம்' திரைப்படங்கள், ஹாரர் வகையில் வித்தியாசமாக அமைந்திருந்தது.

இந்த நிலையில் 'பிரமயுகம்' படத்தை தயாரித்த நிறுவனம், மீண்டும் ராகுல் சதாசிவன் இயக்கத்தில் ஒரு படத்தை தயாரித்து உள்ளது. இந்தப் படத்தில் மோகன்லாலின் மகன், பிரணவ் மோகன்லால் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்புகள் முழுமையாக முடிவடைந்துவிட்ட நிலையில், படத்திற்கான தலைப்பு வெளியிடப்பட்டுள்ளது. திகிலாக உருவாகி இருக்கும் இந்த படத்திற்கு 'டைஸ் ஐரே' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இந்த தலைப்பு லத்தீன் மொழியில் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. நைட் ஷிப்ட் மற்றும் ஒய் நாட் ஸ்டூடியோஸ் இப்படத்தை தயாரிக்கின்றனர். இதுவும் ஹாரர் படமாகவே உருவாகிறது.

இதுபற்றி படக்குழுவினர் கூறுகையில், "பிரமயுகம் படத்தில் மம்முட்டியைப் போல, இந்தப் படத்தில் பிரணவ் மோகன்லால் ஒரு வலுவான முத்திரையைப் பதிப்பார். 'டைஸ் ஐரே' என்ற சொற்றொடர் ரோமன் கத்தோலிக்க திருச்சபையில் பயன்படுத்தப்படும் 13ம் நூற்றாண்டின் லத்தீன் பாடலில் இருந்து வந்தது. இதன் பொருள், 'ஆன்மாக்கள் நியாயம் தீர்க்கப்பட்டு சொர்க்கம் அல்லது நரகத்திற்கு அனுப்பப்படும் இறுதித் தீர்ப்பு' என்பதாகும். இது ஒரு திகில் படத்திற்கு பொருத்தமான தலைப்பாக இருந்ததால் இதனை வைத்துள்ளோம்" என்றனர்.

சினிமாவில் குழந்தை நட்சத்திரமாக அறிமுகமான பிரணவ் மோகன்லால், 2015ல் உதவி இயக்குனராக பணியாற்றினார். பின்னர் இவரது நடிப்பில் 2022ம் ஆண்டு வெளியான 'ஹிருதயம்' படம் நல்ல வரவேற்பை பெற்றது. கடைசியாக இவரது நடிப்பில் வெளியான படம் 'வர்ஷங்களுக்கு சேஷம்' என்பது குறிப்பிடத்தக்கது.

## 96 இயக்குநரின் கனவை நனவாக்கிய சூர்யா




கடந்த 2018ம் ஆண்டு வெளியான திரைப்படம் '96'. இந்த படத்தை இயக்குனர் பிரேம் குமார் இயக்கினார். பள்ளிபருவகால காதல் கதையை அடிப்படையாக கொண்டு உருவான இந்த படத்தில் விஜய் சேதுபதி, திரிஷா முன்னணி கதாபாத்திரங்களில் நடித்திருந்தனர். இப்படம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. அதன் பிறகு இப்படத்தை 2020ம் ஆண்டில் □ஜானு' என்ற பெயரில் தெலுங்கில் ரீமேக் செய்த பிரேம்குமார், அந்த படத்தில் சர்வானந்த், சமந்தாவை நடிக்க வைத்திருந்தார். அதன் பிறகு கார்த்தி அரவிந்த்சாமி நடிப்பில் □மெய்யழகன்' என்ற படத்தை இயக்கினார். அடுத்தபடியாக 96 படத்தின் இரண்டாம் பாகத்தை இயக்கப்போகிறார் பிரேம்குமார்.

இந்நிலையில் இயக்குநர் பிரேம் குமாரின் கனவு வாகனமான வெள்ளைநிற மஹிந்திரா தார் காரை, அவருக்குப் பரிசாக வழங்கியுள்ளனர் சூர்யா மற்றும் கார்த்தி.

இந்த வகை காருக்காக நீண்ட நாள் காத்திருந்தோம். சலிப்பாகி வேண்டாம் என நானே முடிவெடுத்தபோதும், சூர்யாசாரின் தொடர்தேடுதலால் இந்த கார் கிடைத்தது என்று தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நெகிழ்ச்சியுடன் பதிவு செய்துள்ளார் பிரேம் குமார்.

## இந்திய டெஸ்ட் அணிக்கு புதிய கேப்டன், துணை கேப்டன் நியமனம்..?



இந்திய டெஸ்ட் அணியின் கேப்டனாக இருந்த ரோகித் சர்மா கடந்த சில தினங்களுக்கு முன் சர்வதேச டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்தார். ஏற்கனவே டி20 போட்டிகளில் இருந்து ஓய்வை அறிவித்துவிட்ட அவர், ஒருநாள் கிரிக்கெட்டில் மட்டும் தொடர்ந்து விளையாட உள்ளதாக அவர் அறிவித்துள்ளார்.

இதனால் வரும் ஜூன் மாதம் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடருக்கு முன் புதிய கேப்டனை தேடும் பணியில் பி.சி.சி.ஐ. இறங்கியுள்ளது. இதில் கேப்டன் பதவிக்கு சுப்மன் கில்லின் பெயர் முன்னிலையில் உள்ளதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. மேலும் பண்ட்டின் பெயரும் பரிசீலிக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. ரோகித் சர்மாவுக்கு அடுத்து இந்திய டெஸ்ட் அணியின் கேப்டன் என்று எதிர்பார்க்கப்பட்ட முன்னணி வேகப்பந்து வீச்சாளரான ஜஸ்பிரித் பும்ரா அடிக்கடி காயத்தை சந்திப்பதால் அவருக்கு கேப்டன் பதவி வழங்க பி.சி.சி.ஐ. ஆர்வம் காட்டவில்லை என கூறப்படுகிறது.

இந்நிலையில் இந்திய டெஸ்ட் அணியின் புதிய கேப்டனாக சுப்மன் கில்லும், துணை கேப்டனாக விக்கெட் கீப்பர் ரிஷப் பண்டும் நியமிக்கப்பட உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## போர் நிறுத்தம்: ஐபிஎல் மீண்டும் தொடங்குவது எப்போது ?




இந்தியாவும், பாகிஸ்தானும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புதல் அளித்து விட்டன. நேற்றிரவு முழுவதும் மத்தியஸ்தம் முயற்சியில் அமெரிக்கா ஈடுபட்டது. இதில், முழு அளவில் மற்றும் உடனடியாக போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட இரு நாடுகளும் ஒப்பு கொண்டு விட்டன என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்து உள்ளார்.

இந்நிலையில், போர் சூழல் காரணமாக நடைபெற்று வந்த ஐபிஎல் தொடர் நிறுத்தி வைக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது போர் நிறுத்தம் காரணமாக ஐபிஎல் போட்டிகள் அடுத்த வாரத்தில் மீண்டும் தொடங்கும் என தகவல் வெளியாகியுள்ளது.

வரும் வியாழன் அல்லது வெள்ளிக்கிழமை தொடங்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பாதுகாப்பு காரணங்களுக்காக பாதியில் நிறுத்தப்பட்ட பஞ்சாப் டெல்லி அணிகளுக்கு இடையேயான லீக் போட்டி மீண்டும் முதலில் இருந்து தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது .

## இத்தாலி ஓபன் டென்னிஸ்: நடப்பு சாம்பியன் அதிர்ச்சி தோல்வி



பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இத்தாலி ஓபன் டென்னிஸ் தொடர் ரோமில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியனான இகா ஸ்வியாடெக் (போலந்து), டேனியல் காலின்ஸ் (அமெரிக்கா) உடன் மோதினார்.

இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய டேனியல் காலின்ஸ் 61 மற்றும் 75 என்ற நேர் செட் கணக்கில் ஸ்வியாடெக்குக்கு அதிர்ச்சி அளித்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார். தோல்வி அடைந்த இகாஸ்வியாடெக் தொடரிலிருந்து வெளியேறினார்.

## போர்ப்பதற்றம்: டாம் கரண் அழுதார்.. டேரில் மிட்செல்.. வீரர்களின் துயரங்களை பகிர்ந்த ரிஷாத் ஹொசைன்

6 அணிகள் பங்கேற்றுள்ள 10வது பாகிஸ்தான் சூப்பர் லீக் (பி.எஸ்.எல்.) 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கடந்த ஏப்ரல் 11ந் தேதி தொடங்கி ராவல்பிண்டி, கராச்சி, முல்தான், லாகூர் ஆகிய 4 நகரங்களில் நடந்தது. வருகிற 18ந் தேதி வரை நடைபெறும் இந்த போட்டி இறுதி கட்டத்தை நெருங்கி விட்டது. இதனிடையே பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக இந்திய ராணுவம் பாகிஸ்தானில் செயல்பட்டு வரும் பயங்கரவாதிகள் முகாம் மீது துல்லிய தாக்குதல் நடத்தியது. இதனால் இரு நாடுகளுக்கு இடையே போர் பதற்றம் நிலவியது. இந்த போர்ப்பதற்றம் இன்று மாலை 5 மணியுடன் முடிவடைந்தது. ஒரு நாடுகளும் போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்டன. இந்த மோதலில் பாகிஸ்தானின் ராவல்பிண்டி கிரிக்கெட் ஸ்டேடியம் அருகில் நடந்த டிரோன் தாக்குதலில் கட்டிடம் சேதமடைந்ததுடன், சிலர் காயம் அடைந்தனர். இதையடுத்து பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம், எல்லா அணி நிர்வாகத்துடன் அவசர ஆலோசனை நடத்தியது. இதன் முடிவில் பி.எஸ்.எல். தொடர் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து வீரர்கள் பத்திரமாக துபாய் அழைத்து செல்லப்பட்டனர். அங்கிருந்து தங்களது நாடுகளுக்கு செல்ல உள்ளனர். இந்நிலையில் இந்தியா பாகிஸ்தான் இடையிலான போர்ப்பதற்றத்தின்போது பி.எஸ்.எல். தொடரில் பங்கேற்றிருந்த வெளிநாட்டு கிரிக்கெட் வீரர்கள் அடைந்த துயரத்தை வங்காளதேச வீரர் ரிஷாத் ஹொசைன் பகிர்ந்துள்ளார். இது குறித்து பேசிய அவர் கூறுகையில், "சாம் பில்லிங்ஸ், டேரில் மிட்செல், குஷால் பெரேரா, டேவிட் வைஸ், டாம் கரன் போன்ற வெளிநாட்டு வீரர்கள் அனைவரும் மிகவும் பயந்தனர். துபாயில் தரையிறங்கிய மிட்செல், 'இனி ஒருபோதும் பாகிஸ்தானுக்குச் செல்லமாட்டேன்' என்று என்னிடம் கூறினார். குறிப்பாக இதுபோன்ற சூழ்நிலையில். ஒட்டுமொத்தமாக, அவர்கள் அனைவரும் திகிலடைந்தனர். நாங்கள் விமான நிலையம் சென்றபோது அந்த விமான நிலையம் மூடப்பட்டிருந்தது. அதைப் பார்த்தவுடன் அவர் (டாம் கரண்) சிறு குழந்தை போல அழத் தொடங்கினார். அவரைக் கையாள 23 பேர் தேவைப்பட்டனர்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.